22.01.2026

**அ.வ.எண். 92/2021 C/w.3/2022**

**வா.சா.1 – திரு. வீரன், த/பெ.சுப்பன்**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 22.01.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை செய்கிறேன். எனக்கு தமிழ், எழுத படிக்க தெரியும் என்றால் ஓரளவிற்கு தெரியும். நான் மின்சார வாரியத்தில் லைன் மேனாக வேலை செய்கிறேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. நான் மின்சார வாரியத்தில் வேலை செய்துகொண்டு தமிழ் எழுத படிக்க தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.92/2021 வழக்கில் 2ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி சிவசுப்பிரமணியன் என் மீதும், என் தம்பி முத்துசாமி மீதும், அசல் வழக்கு எண்.3/2022 வழக்கை தாக்கல் செய்த பின்பு நாங்கள் சிவசுப்பிரமணியனை வழக்கில் சேர்த்துள்ளோம் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ. 1 ஆவணம் மூலமாக நானும், என் தம்பியும், என் சகோதரி அன்னபூரணியும், திருமாத்தாளும், 04.08.1998 தேதியில் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அதில் நானும், என் தம்பியும் பாகம் எடுத்துகொண்டு மற்றவர்களுக்கு பணம் கொடுத்ததாக எழுதியுள்ளோம் என்றால் சரிதான். பாகப்பிரிவினையின் படி, A அட்டவணை சொத்து எனக்கும், B அட்டவணை சொத்து என் தம்பி முத்துசாமிக்கு பாத்தியம் என்றால் சரிதான். மலைப்பாளையம் கிராமம், க.ச.எண்.351/5 காலையில் மேற்கு பகுதியில் ஏக்கர் 1.51 சென்ட் என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தம்பிக்கும் க.ச.எண்.351/5 காலையில் கிழபுறமாக ஏக்கர் 1.51 சென்ட் என ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. என்னுடைய A பாக சொத்திற்கும், என் தம்பியின் B பாக சொத்திற்கும் செக்குபந்தியில் க.ச.எண்.352 காலையில் கிழமேல் வண்டிப்பாதைக்கு தெற்கு என உள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதையில் தார் ரோடு

தற்போது போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வண்டிப்பாதையிலிருந்து என்னுடைய சொத்திற்கும், என்னுடைய தம்பியின் சொத்திற்கும் செல்ல முடியும் என்றால் ரோட்டை ஒட்டி பள்ளம் உள்ளது, பள்ளத்தை தாண்டி செல்ல வேண்டும்.ரோட்டை ஒட்டி பள்ளம் உள்ளது என்பதை காட்ட ஆவணமோ அல்லது நீதிமன்றம் மூலமாக ஆணையரையோ வைத்து அதை காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

4. அவ்வாறு தார் ரோட்டை கிழமேலாக பள்ளம் இருந்தால், செக்குபந்தியில் கிழமேல் பள்ளத்திற்கு என எழுதியிருப்போம் என்றால் பத்திரத்தில் எழுதவில்லை. A பாக சொத்திற்கும், மேல்புறமாக மாமூல் தடம் உள்ளது என சொல்கிறேன். A பாக சொத்திற்கும், மேல்புறமாக மாமூல் தடம் உள்ளது என வா.சா.ஆ.1 பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். மூலப்பத்திரத்தில் உள்ளது. நான் மூலப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகப்பத்திரத்தில் A பாக சொத்திலிருந்து, B பாக சொத்திற்கு செல்ல தடம் உள்ளது என எழுதியுள்ளோமா என்றால் இல்லை.

5. எனது பூமிக்கு தென்புறமாக பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் பூமிக்கு எனது காட்டை ஒட்டி மேல்புறமாக உள்ள தடத்தின் வழியாக தான் செல்ல முடியும் என்றும், வேறு தடம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் கண்டவாறு வாதி மற்றும் பிரதிவாதிகள் பூமி உள்ளது என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடத்தில் உள்ள தடம் வழியாக தான் வாதி, பிரதிவாதிகள் சென்று வருகிறோம். வழக்குரையில் 1ம் அயிட்ட சொத்தாக என்னுடைய சொத்தும், 2ம் அயிட்ட சொத்தாக என் தம்பியின் சொத்தும், 3ம் அயிட்ட சொத்தாக வண்டிப்பாதை காட்டப்பட்டுள்ளது. 3ம் அட்டவணை சொத்தான தடம் எந்த காலை எண்ணில் எங்கிருந்து, எதுவரை செல்கிறது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்தை வழக்குரையில் சொல்வதற்கு எங்களிடம் ஆவணம் இல்லை என்றால் மூலப்பத்திரத்தில் உள்ளது.

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur